## 20. பெருந்தொழில்கள்

## (Large Industries)

இப்பகுதியில் நாம் இரும்பு - எஃகுத் தொழில், துணித் தொழில், சர்க்கரை, தேயிலை, சணல் ஆகிய பெருந்தொழில்களை ஆராயலாம்.

**அ. இரும்பு எஃகுத் தொழில்** (Iron and Steel Industry) இரும்பு எஃகுத் தொழில் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சிக்கே மிக அவசிய மானது. வேறெந்தவொரு தொழிலையும்விட நம் நாட்டில் இத்தொழில் அதிக தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. இங்கு சமார் 3 லட்சம் தொழிலாளர்கள் வேலையில் உள்ளனர். கணிசமான அளவிற்கு இரும்பும், இரும்புத் தாதுப் பொருட்களும் ஏற்றுமதி செய்கின்றோம்.

**திட்டக்காலத்திற்கு முன் வளர்ச்சி** : கி.மு. 2000 வாக்கிலேயே இரும்பு இந்தியாவில் உற்பத்தியானது. நவீன கால இந்தியாவில் முதல இரும்புத் தொழிற்சாலை சேலத்திற்கு அருகில் 1830ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது வெற்றிகரமாக அமையவில்லை. 1875ல் வங்காளத்தில் பராக்கர் (Baraker) என்னுமிடத்தில் தொடங்கப்பட்ட ஆலை இரும்பை உற்பத்தி செய்ய முடிந்ததே தவிர எஃகை உற்பத்தி செய்ய முடியவில்லை. 1907ல் பீகார் மாநிலத்தில் ஜாம்ஷெட்பூரில் தொடங்கப்பட்ட டாட்டா இரும்பு மற்றும் எஃகு தொழிற் சாலை (Tata Iron and Steel Company - TISCO) இத்தொழிலின் வெற்றிகரமான சரித்திரத்திற்கு வலுவான அடித்தளமாக அமைந்தது. 1918ல் இந்தியன் இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை (Indian Iron and Steel Company - IISCO) வங்காளத்தில் ஹிராப்பூர் என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது விஸ்வேஸ்ரய்யா இரும்பு மற்றும் எஃகு தொழில் எனப்படும் ஆலை மைசூர் இரும்பு தொழிற்சாலை என்ற பெயரில் 1923ல் கர்நாடக மாநிலத்தில் பத்ராவதியில் தொடங்கப்பட்டது. இத்தொழில்களுக்கு வெளிநாட்டுப் போட்டியிலிருந்து 1924ல் அளிக்கப்பட்ட பாதுகாப்பு 1947ஆம் ஆண்டு வரை நீடித்தது. இந்த பாதுகாப்பினாலும் இரு பெரும் உலக போரினாலும் இத்தொழில் வளர்ந்து உறுதியானது. நாடு விடுதலை அடைந்தபோது, ஆண்டிற்கு சமார் ஒரு மில்லியன் டன் இரும்பு எஃகு உற்பத்தியானது.

### திட்டகாலங்களில் வளர்ச்சி

**முதலாவது அய்ந்தாண்டுத் திட்டம் (1951-56)** : முதலாவது அய்ந்தாண்டுத் திட்டத்தில் மைசூர் இரும்பு மற்றும் எஃகு ஆலையின்



உற்பத்தித் திறன் அதிகரித்ததை தவிர பிற ஆலைகளில் உற்பத்தி குறிப்பிடத் தக்க அளவில் அதிகரிக்கவில்லை. இரும்பு மற்றும் எஃகு துறை வளர்ச்சிக்கு ரூ. 33 கோடி இத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டது. 1950ல் எஃகு உருக்கு கட்டிகளின் (Steel Ingots) உற்பத்தி 14 இலட்சம் டன்னிலிருந்து 1955ல் 17 இலட்சம் டன்னாக உயர்ந்தது.

**இரண்டாவது அயந்தாண்டுத் திட்டம் (1956-61)** : இத்திட்ட காலம் இத் தொழிலின் பொற்காலமெனலாம். இந்த 5 ஆண்டுக் காலத்தில் இந்தியாவில் இரும்பு மற்றும் எஃகு தொழிலின் உற்பத்தித் திறனை 1.5 மி.டன்னிலிருந்து 6 மி.டன்னாக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதன் கீழ் பொதுத்துறையில் 3 பெரிய தொழிற்சாலைகள் ரூ. 635 கோடி மூலதனத்தில் தொடங்கப்பட்டன.

செர்மனி உதவியுடன் ஒரிசா மாநிலத்தில் ரூர்கேலாவிலும் (Rourkela) அன்றிருந்த சோவியத் யூனியனின் உதவியுடன் மத்திய பிரதேசத்தில் பிலாய் (Bhilai) என்னுமிடத்திலும், இங்கிலாந்து உதவியுடன் மேற்கு வங்காளத்தில் துர்க்காபூரிலும் (Durgaput) ஆக 3 பெரிய ஒருங்கிணைந்த இரும்பு எஃகு ஆலைகள் பொதுத்துறையில் ஏற்படுத்தப்பட்டன. ஆரம்பத்தில் இவை ஒவ்வொன்றும் 1 மி.டன் உற்பத்தி செய்யும் திறனுடையதாக இருந்தன. டாட்டா இரும்பு ஆலையின் உற்பத்தித் திறன் 8 இலட்சம் டன்னிலிருந்து 15 இலட்சம் டன்னிற்கு அதிகரிக்கப்பட்டது. பிற ஆலைகளின் உற்பத்தித் திறனும் உயர்த்தப்பட்டன. இதனால் இத்திட்ட கால இறுதி ஆண்டான 1960-61ல் 11 மி.டன் இரும்பு கனிமங்களும், 4.31 மி.டன் தேனிரும்பும் (Pig Iron), 3.42 மி.டன் எஃகு உருக்கு கட்டிகளும் 2.39 மி.டன் உற்பத்தி முழுமை பெற்ற எஃகும் (finished steel) நாட்டில் உற்பத்தியானது.

**மூன்றாவது அய்ந்தாண்டுத் திட்டம் (1961-66)** : இத்திட்ட காலத்தில் இரும்பாலைகளின் வளர்ச்சிக்கு ரூ. 670 கோடி ஒதுக்கப்பட்டது. பீகார் மாநிலத்தில் பொக்காரோவில் (Bokaro) அன்றிருந்த சோவியத் யூனியனின் உதவியுடன் பொதுத்துறையில் நான்காவது பெரிய இரும்பு மற்றும் எஃகு ஆலை உருவாக்கப்பட்டது. பிற பொதுத்துறை மற்றும் தனியார் துறை ஆலை களின் உற்பத்தித் திறனும் அதிகரிக்கப்பட்டது. இத்திட்டகாலத்தில் இறுதி ஆண்டில் 4.9 மி.டன் விற்பனைக்குரிய எஃகும் (Saleable Steel) 6.5 மி.டன் எஃகு உருக்குக் கட்டிகளும், 18.1 மி.டன் இரும்பு கனிமமும் உற்பத்தியானது.

**நான்காவது அய்ந்தாண்டுத் திட்டம் (1969-74)** : இத்திட்டத்தில் இத் துறை வளர்ச்சிக்கு ரூ. 1,121 கோடி ஒதுக்கப்பட்டது. பிலாய் மற்றும் பொக்காரோ இரும்பாலைகளின் உற்பத்தித் திறன் மேலும் அதிகரிக்கப்பட்டது. திட்ட கால இறுதி ஆண்டான 1973-74ல் 5.7 மி.டன் எஃகு உருக்குக் கட்டிகளும் 4.35 மி.டன் விற்பனை எஃகும் உற்பத்தியானது. இந்தியன் (IISCO) ஆலையை மத்திய அரசு எடுத்துக் கொண்டது. ரூ. 2,000 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் இந்திய எஃகு ஆணையம்(Steel Authority of India Ltd., - SAIL) 1973ல் உருவாக்கப் பட்டது. இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் கலைக்கப்பட்டு, அதன் நிர்வாகத்தில் இருந்த எல்லா பொதுத்துறை இரும்பு ஆலைகளின் நிர்வாகமும் இதனிடம் ஒப்படைக்கப்பட்டது.

**அய்ந்தாவது அய்ந்தாண்டுத் திட்டம் (1974-78)** : பிலாய், பொக்காரோ, இந்தியன் ஆகிய ஆலைகளின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டது. கடைசி ஆண்டான 1977-78ல் 43 மில்லியன் டன் இரும்பு கனிமங்களும், 9.51

Scanned with CamScanner

மி.டன் வார்ப்பு இரும்பும், 9.8 மி.ட. எஃகு உருக்குக் கட்டிகளும் உற்பத்தியானது. பொதுத்துறை ஆலைகளுக்கு ரூ. 2,237 கோடி ஒதுக்கப்பட்டது. 1977-78ல் விசேட ரக எஃகு ரூ. 116 கோடி செலவில் 3.48 இலட்சம் டன் இறக்குமதி செய்யப்பட்டது. அதே ஆண்டில் ரூ. 231 கோடிக்கு 18 இலட்சம் டன் இரும்பு மற்றும் எஃகு ஏற்றுமதி செய்யப்பட்டது.

**ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டம் (1980-85) :** பொதுத்துறை இரும்பாலைகளுக்காக இத்திட்டத்தில் ரூ. 4,000 கோடி ஒதுக்கப்பட்டது. பல்வேறு ஆலைகளின் உற்பத்தித்திறன் அதிகமாக்கப்பட்டது. மேலும் எல்லா ஆலைகளுக்குள்ளும் மின் தட்டுப்பாடு காலத்தில் மின் உற்பத்தி செய்யும் மின் நிலையங்களை (Captive Power Station) அமைக்கவும், பழைய இயந்திரங்களை மாற்றி அமைக்கவும் நிதி ஒதுக்கப்பட்டது. ரூ. 200 கோடி செலவில் டாட்டா எஃகாலையை நவீனப்படுத்தவும் விரிவுப்படுத்தவும் திட்டமிடப்பட்டது. சேலம் எஃகாலை 1982 மார்ச் மாதம் முதல் உற்பத்தியை தொடங்கியது. இதன் முதலீடு சுமார் ரூ. 182 கோடியாகும். சிறப்பு ரக எஃகை மட்டும் இது தற்போது உற்பத்தி செய்கின்றது. சேலத்திற்கருகே கிடைக்கும் இரும்பு கனிமங்களைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த இரும்பு மற்றும் எஃகு ஆலையாக இதை மாற்றி அமைக்க தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். ஒருங்கிணைந்த 8 ஆலைகளும் 1979-80ல் 8.03 மி.டன் எஃகு உருக்குக் கட்டிகளை உற்பத்தி செய்தது 1984-85ல் 8.5 மி.டன்னாகவும் உயர்ந்தது. அவ்வாறே இவைகளின் 1984-85ல் விற்பனை எஃகு உற்பத்தி 7.1 மி.டன். முடிவுற்ற எஃகுகளின் (finished steel) உற்பத்தி 5.4 மி.டன் எனவும் உயர்ந்தது.

**ஏழாவது அய்ந்தாண்டுத் திட்டம் (1985-90) :** இத்தொழிலுக்கு பொதுத் துறையில் ரூ. 6,420.13 கோடி ஒதுக்கப்பட்டாலும் உண்மையில் ரூ. 9,064.03 கோடி செலவாகியது. பல்வேறு ஆலைகளின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப் பட்டது. நவீன மயமாக்கப்பட்டன. இத்திட்டத்தின் இறுதி ஆண்டான 1989-90ல் ஒருங்கிணைந்த எஃகாலைகள் தேனிரும்பு 12.42 இலட்சம் டன், சிறு ஆலைகள் உற்பத்தியையும் சேர்த்து 13.34 ல.ட., விற்பனை எஃகு ஒருங் கிணைந்த ஆலைகள் 90.29 ல.ட., சிறு ஆலைகளையும் சேர்த்து 126.06 ல.ட. உற்பத்தி செய்தன. 55.4 மி.டன் இரும்பு கனிமமும் உற்பத்தியாயின. அனைத்து ஒருங்கிணைந்த ஆலைகளின் நிறுவப்பட்ட எஃகு உருக்குக் கட்டிகளின் உற்பத்தித் திறன் 1990 மார்ச் இறுதியில் 14.7 ல.டன் எனவும் உயர்ந்து நின்றது.

**1990-92** சிறு ஆலைகள் உட்பட நாட்டில் 1990-91ல் தேனிரும்பு 14.96 (13.94) ல.ட., 91-92ல் 15.89 (14.87) ல.ட. உற்பத்தியானது. அதே போல் விற்பனை எஃகு 90-91ல் 131.89 (93.29) ல.ட., 91-92ல் 139.7 (105.7) ல.ட. எனவும் என்றுமில்லாத உயர் அளவை எட்டியது. (ஒருங்கிணைந்த ஆலைகளின் உற்பத்தி மட்டும் அடைப்பிற்குள் தரப்பட்டுள்ளது) 90-91ல் 55.5 மி.ட., 91-92ல் 57.5 மி.டன் எனவும் இரும்பு கனிமம் உற்பத்தி செய்யப்பட்டது. இதில் பாதிக்கு மேல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 24.06.91ல் புதிய தொழில் கொள்கை அறிவிக்கப்பட்டதையடுத்து, 91-92ல் இரும்பு எஃகு தொழிற்சாலைகளை ஏற்படுத்த அதுவரை இருந்த அரசனுமதி (licence) முறை நீக்கப்பட்டது; விலையிலிருந்த கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. இதனால் உற்பத்தி அதிகரித்தது.

...ாவது திட்டம் முழுவதிலும் ரூ. 3,282 கோடிக்கு 156.8 மி.ட. இரும்பு கனிமம் ஏற்றுமதி செய்தோம். ரூ. 8,513 கோடிக்கு 147.49 இலட்சம் டன்



இரும்பு எஃகு இறக்குமதி செய்தோம். 90-91 மற்றும் 91-92 ஆகிய இரு ஆண்டுகளிலும் ரூ. 2,484 கோடிக்கு 62 மி.ட. இரும்பு கனிமம் ஏற்றுமதியும், ரூ. 4,310 கோடிக்கு 33.1 ல.ட. இரும்பு எஃகு இறக்குமதியும் செய்தோம்.

**எட்டாவது அய்ந்தாண்டுத் திட்டம் (1992-97) :** இத்துறைக்கு ரூ. 14,579 கோடி ஒதுக்கப்பட்டது. இதன் பயனாக 96-97ல் 66.1 (திட்ட இலக்கு 72) மி.ட. இரும்பு கனிமம், முற்றுப் பெற்ற எஃகு (சிறு ஆலைகளையும் சேர்த்து) 22.7 மி.ட. அடிப்படை எஃகு (Crude Steel) 23.8 மி.ட. என்றும் உற்பத்தி அதிகரித்தது.[1]

**இத்திட்ட 5 ஆண்டுகளிலும் ரூ. 7,202 கோடிக்கு, 134.4 மி.ட. இரும்பு கனிமம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இருப்பினும் இரும்பு எஃகு இறக்குமதி ரூ. 20,085 கோடிக்கு 94.71 ல.டன் என்று மதிப்பு உயர்ந்து விட்டது.**

**ஒன்பதாவது, பத்தாவது அய்ந்தாண்டுத் திட்டம் :** எஃகு அமைச்சகத்திற்கு ரூ.16,232.5 கோடி ஒன்பதாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டாலும் ரூ.6,490.70 கோடி மட்டுமே செலவாகியிருக்கலாம். இத்திட்ட உற்பத்தியளவை பின்னிணைப்புப் பட்டியல் எண்:9 விளக்குகின்றது. பத்தாவது (2002–07) திட்டத்திற்கு ரூ.11,044 கோடி எஃகு அமைச்சகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து வகை இரும்பு எஃகு இறக்குமதி 2002–03ல் ரூ.4,297 கோடிக்கு 18.01 இலட்சம் டன், 03–04ல் ரூ.6,921 கோடிக்கு 23.75 இலட்சம் டன், 04–05ல் ரூ.11,678 கோடிக்கு 32.29 இலட்சம் டன் இறக்குமதி செய்யப்பட்டது. நமது இரும்பு எஃகு ஏற்றுமதி இம்மூன்று ஆண்டுகளிலும் வரிசையாக 51.4 + 53.6 + 47.9 இலட்சம் டன்கள் என்றிருந்தன. உற்பத்தியளவுகளை பின்னிணைப்புப் பட்டியல் தெளிவாக்குகின்றது.

இரும்புத் தாதுக்களை வெட்டியெடுத்து காய்ச்சுவது முதல் பல்வேறு ரக இரும்பு எஃகுகளை உற்பத்திச் செய்வது வரை எல்லா வசதிகளையும் உடைய ஆலைகளை ஒருங்கிணைந்த இரும்பு மற்றும் எஃகாலைகள் என்பர். இவ்வகையான ஆலை தற்போது நாட்டில் தனியார் துறையில் ஒரு டாட்டா (TISCO) ஆலையும், பொதுத்துறையில் பிலாய், துர்க்காபூர், ரூர்கேலா, பொக்காரோ, இந்தியன் ஆகிய 5 ஆலைகளும் இந்திய எஃகு ஆணையம் என்ற பொதுத்துறையின் (SAIL) நிருவாகத்திலும், மற்றொரு பொதுத்துறை ஒருங்கிணைந்த ஆலையான விசாகப்பட்டினம் ஆலை (1992 முதல் செயல்படுகின்றது) இராஷ்டிரிய இஸ்பாட் நிகம் (RINL - RASHTRIYA ISPAT NIGAM LTD) என்ற மற்றொரு பொதுத்துறை நிருவனத்தின் கீழும் செயல்படுகின்றன. ஆக மொத்தம் நாட்டில் தற்போது 7 ஒருங்கிணைந்த இரும்பு எஃகு ஆலைகள் உள்ளன. கர்நாடக மாநிலம் பத்ராவதியில் உள்ள விஸ்வேஸ்வரய்யா இரும்பு எஃகு ஆலை, சேலம் எஃகாலை உட்பட பல சிறப்பு ரக எஃகாலைகள் இந்திய எஃகு ஆணையத்தினால் நிருவகிக்கப்படுகின்றன. இந்தியன் இரும்பு எஃகாலை (IISCO) 2006 பிப்ரவரியில் இந்தி எஃகு ஆணையத்துடன் இணைந்துவிட்டது (merged). தனியார் துறையில் நூற்றுக்கணக்கான சிறிய இரும்பாலைகள் செயல்படுகின்றன.

**இந்திய எஃகு ஆணையம் (SAIL - Steel Authority of India Ltd):** பொதுத்துறை இரும்பு எஃகாலைகளை நிருவகிப்பதற்காக 1973ல் ஆரம்பிக்கப்பட்ட இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.5,000 கோடி, 2006 மார்ச் இறுதியில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.4,130 கோடியாகும். இடைக்காலத்தில் நட்டமடைந்த இந்நிறுவனம் 2003–04 முதல் மீண்டும் இலாபம் ஈட்டுகின்றது. 1996–97ல் இதன் விற்பனை ரூ.14,131 கோடியாக இருந்தது 2005–06ல் ரூ.32,280 ஆக பெருக்கெடுத்துள்ளது.[2]

1. GOI, Economic Survey, 1999-2000, P.S-34.
2. SAIL, Annual Report, 2005-06, PP.26-7

Scanned with CamScanner

தற்போது பிலாய், பொக்காரோ, துர்க்காபூர், ரூர்கேலா, இந்தியன் எஃகு ஆகிய ஒருங்கிணைந்த இரும்பு எஃகு ஆலைகளை நிர்வகிக்கின்றது. முன்பு கர்நாடக அரசிடமிருந்து விஸ்வேஸ்வரய்யா இரும்பு எஃகாலையை 1989 ஆகஸ்டில் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. மேலும் ஏராளமான (சேலம் எஃகாலை உட்பட) சிறப்பு ரக எஃகு உற்பத்தி, சிறு இரும்பாலைகளையும் தன் பொறுப்பில் இயக்குகின்றது. உலகில் செயல்படும் மிகப் பெரிய இரும்பு எஃகு நிறுவனங்களில் இந்தியன் எஃகு ஆணையம் 1992ல் மிகப் பெரிய பத்தாவது நிறுவனமாக மலர்ந்திருப்பது பெரும் சாதனையாகும். அவ்வாண்டில் உலகில் முதலாவது நிறுவனமான சப்பானை சேர்ந்த நிப்பன் எஃகு 25.1 மி.ட. உற்பத்தி செய்தபோது நமது இந்திய எஃகு ஆணையம் 9.7 மி.ட உற்பத்தி செய்து சாதனை படைத்தது.

**சிறு ஆலைகள் :** சிறிய இரும்பு எஃகாலைகளும் நம் நாட்டில் நூற்றுக்கணக்கில் உள்ளன. இவைகள் 98-99ல் 7.33 மி.ட.. அடிப்படை எஃகு உற்பத்தி செய்தன. பிற வகை இரும்பையும் உற்பத்தி செய்தது.

**ஏற்றுமதி இறக்குமதி :** ஒன்பதாவது திட்ட 5 ஆண்டுகளிலும் ரூ. 8,228 கோடிக்கு 110.7 மி.டன் இரும்புக் கனிமம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதே காலத்தில் ரூ. 21,131 கோடிக்கு 95.5 ல.ட. இரும்பு எஃகு இறக்குமதி செய்யப்பட்டது.[1]

**சிக்கல்**

இரும்பையும் உருக வைக்கும் சிக்கல்களை நாம் தொகுத்துக் கூறலாம்.

**1. அதிக முதலீடு :** இரும்பு எஃகாலைகளை நிறுவ மிக அதிக முதலீடு தேவைப்படுகின்றது. அதனால் தான் வெளிநாட்டினர் உதவியுடன் நான்கு ஆலைகளை அமைத்துள்ளோம். வெளிநாட்டின் உதவியைப் பெறுவதில் பல சிக்கல்கள் உள்ளன.

**2. தொழில் நுணுக்கம் :** மேலை நாடுகளுடன் ஒப்பிடும்போது நம்மிடம் ஆலைகளை நிறுவுவதிலும் நிர்வகிப்பதிலும் போதிய நவீன தொழில் நுணுக்க முறைமை இல்லை.

**3. தனி ரக நிலக்கரி :** எஃகாலைகளுக்கு வேண்டிய மிக உயர்ந்த ரக நிலக்கரி நம் நாட்டில் பற்றாக்குறையாக இருப்பதால் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. கோககிங் (Coking) நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகின்றது.

**4. போக்குவரத்து :** நிலக்கரி மற்றும் இரும்புத் தாதுக்கள் போன்ற மூலப் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்ட இரும்பும் மிக எடையுள்ள பொருள்களாகும். இதனால் போக்குவரத்துச் செலவு அதிகமாவதுடன் அவைகளை அனுப்புவதற்கு இரயில் பெட்டிகள் போதிய அளவுக்குக் கிடைப்பதில்லை. எனவே உற்பத்தியும் பகிர்வும் பாதிக்கப்படுகின்றது.

**5. குறைந்த மொத்த உற்பத்தி :** 1995ம் ஆண்டில் 101.6 மி.டன் இரும்பு உற்பத்தி செய்து சப்பான் முதலாவது இடத்தில் இருந்தது. அதைத் தொடர்ந்து அமெரிக்கா 93.1 மி.ட., சீனா 93 மி.ட. இரஷ்யா 51.4 மி.ட., செர்மனி 41.8 மி.ட என்று முதல் 5 இடங்களைப் பிடித்துக் கொண்டன. இந்தியா 20.4 மி.ட. உற்பத்தி செய்து பத்தாவது இடத்தில் இருந்தது. 1988ம் ஆண்டில் 14.2 மி.ட.

1 GOI. *Economic Survey*, 2002-03, PP. S. 81-86.



உற்பத்தி செய்து 15வது இடத்திலிருந்து தற்போது 10வது இடத்தைப் பிடித்துள்ளது. இருப்பினும் சராசரி இரும்பு நுகர்ச்சியை ஒப்பிடும்போது நாம் மிகவும் பின்தங்கியிருக்கின்றோம்.

**6. குறைந்த தொழிலாளர் உற்பத்தி :** 1981ல் சராசரியாக ஒரு தொழிலாளி யின் இரும்பு உற்பத்தியின் அளவு சப்பானில் 331 டன், அமெரிக்காவில் 322 டன், இத்தாலியில் 320 டன்னும் ஆகும். ஆனால் இந்தியாவில் 56 டன்கள் மட்டுமேயாகும். நவீன உற்பத்தி சாதனங்கள் இல்லாமை, நவீன ஆலைகள் இல்லாமை, தொழிலாளர்களுக்குப் போதிய பயிற்சி இல்லாமை போன்றவை களால் உற்பத்திக் குறைவாக உள்ளது.

**7. குறைந்த சராசரி நுகர்ச்சி :** சராசரியாக ஒரு நபர் பயன்படுத்தும் இரும்பின் அளவு சப்பானில் 676 கி.கி., அமெரிக்காவில் 383 கி.கி., மலேசியாவில் 239 கி.கி., உலக சராசரி 149 கி.கி. என்றிருந்தபோது இந்தியாவில் 22 கி.கி. மட்டுமேயாகும். மிக ஏராளமாக இரும்பு மற்றும் நிலக்கரி சுரங்கங்கள் இருந்தும் உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது நாம் குறிப்பிட்ட அளவு சராசரித் தேவையைக்கூட பூர்த்தி செய்ய முடியவில்லை.

**8. விலைக் கட்டுப்பாடு :** தேவைக்கேற்ப உற்பத்தியளவு இல்லாததால் அரசாங்கம் விலைக்கட்டுப்பாடும் பகிர்வும் கொண்டு வந்தது. இதனால் முன்பெல்லாம் கருப்புச் சந்தை நிலவியது. வியாபார இடைத் தரகர்கள் தான் கொள்ளை இலாபம் அடித்தனர். இதனால் அரசுக்கோ ஆலைகளுக்கோ ஆதாயமில்லாமலிருந்தது. பகிர்வு, விலையில் இருந்த கட்டுப்பாடுகளை அரசு 16.01.92ல் நீக்கி விட்டதால், நிலைமை மேம்பாடு அடைந்துள்ளது.

**9. சிறு ஆலைகள் :** நாட்டிலுள்ள ஏராளமான சிறு எஃகாலைகள் தரமான மூலப்பொருள்கள், நிலக்கரி, மின்சாரம் போன்றவைகளின் பற்றாக்குறையாலும் அதிக உற்பத்திச் செலவினாலும் அவதிப்படுகின்றன.

**10. பொதுத் துறை நிறுவனங்களின் நட்டம் :** பொதுத்துறை ஆலைகள் அனைத்தும் ஆரம்பத்திலிருந்தே நட்டத்தில் தான் இயங்கின. இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் 31.03.73 வரை மொத்தம் ரூ. 251 கோடி நட்டப்பட்டுள்ளது. SAILன் இலாபம் 81-82ல் ரூ.39.11 கோடியாக இருந்தது. ஆனால், 82-83ல் ரூ. 106 கோடியும், 83-84ல் ரூ. 215 கோடியும் நட்டமேற்பட்டது. செயல்திறன் வளர்ந்ததால் 84-85 முதல் தொடர்ந்து இலாபம் ஈட்டுகின்றது. 93-94ல் நிகர இலாபம் 549.73 கோடியாக உயர்ந்துள்ளது. இது என்றுமில்லாத ஓர் உயரளவாகும். 88-89 வரை ஈட்டிய இலாபத்தால், முன்னர் நட்டமடைந்த எல்லாத் தொகையையும் ஈடு செய்து விட்டது.

**11. குறைந்த உற்பத்தித் திறன் :** பொதுத் துறையில் உள்ள எல்லா ஆலைகளுமே நிறுவப்பட்ட உற்பத்தித் திறன் இலக்கை அடைய முடியவில்லை. அதன் முழு உற்பத்தி திறனில் உற்பத்தி அளவு விழுக்காடு ஒவ்வொரு ஆண்டிலும் மிகக் குறைவாகவே உள்ளது.

## ஆ. பருத்தித் துணித் தொழில் (Cotton Textile Industry)

**முக்கியத்துவம் :** தொழிலாளர்களுக்கு ஆலைகளில் வேலை அளிப்பதிலும் உற்பத்தி மதிப்பிலும், தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதிலும் இப்போது இத்தொழில் முதன்மையாகத் திகழ்கின்றது. முதலீடு செய்த தொகையில் அண்மைக் காலங்கள் வரை இத்தொழில் வகுத்த முதலிடத்தையே இரும்பு மற்றும்

Scanned with CamScanner

எஃகுத் தொழில் பிடித்துக் கொண்டதால் இத்தொழில் தற்போது இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது. துணிகள் ஏற்றுமதியில் உலகத்தில் சப்பான் முதல் இடத்தையும் இந்தியா இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றன. ஆலை உற்பத்தி பக்கம் மட்டும் 35 மில்லியன் மக்களுக்கு வேலையளிக்கின்றது. வேளாண்மையில் பருத்தி உற்பத்தியையும் சேர்த்தால் இத்துறை 90 மில்லியன் மக்களுக்கு வேலையளிக்கின்றது. அனைத்து தொழில் உற்பத்தியில் சுமார் 14% மதிப்புடைய பொருள்கள் இத்தொழிலிருந்து வருவதுதான் நமது மொத்த இறக்குமதி மதிப்பில் சுமார் 7-8% இத்தொழிலுக்காக இறக்குமதியாவதாகும். ஆனால் அதே சமயம் இந்தியாவின் ஏற்றுமதியில் 30%க்கு மேல் இத்தொழிலின் பங்காக உள்ளது. நமது விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் இத்தொழில் ஒன்றிணைந்தது ஆகும். மைய மற்றும் பல்வேறு மாநில அரசுகளுக்கு உற்பத்தி வரி, வருமான வரி, விற்பனை வரி போன்ற பல்வேறு வரிகளாக ஆண்டிற்கு சுமார் ரூ. 5,000 கோடி செலுத்துகின்றது. உலகத்திலேயே அதிக நிலப் பரப்பில் பருத்தி பயிரிடப்படும் நாடாகவும் இந்தியா திகழ்கின்றது. இந்த அளவிற்கு முக்கியமான இத்தொழிலின் வளர்ச்சியினை நாம் ஆராயலாம்.

**வளர்ச்சி**

இந்தியா 1947ல் விடுதலை அடைந்தபோது இந்தியாவில் மொத்தம் 409 நெசவாலைகளும் பாகிஸ்தானில் 14 ஆலைகளும் இருந்தன. முதலாவது அய்ந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டில் ஆலைகளிலிருந்து 745 மி. கிலோ நூலும், 4,230 மி.மீட்டர் துணியும் உற்பத்திச் செய்வதென்ற குறியளவையும் தாண்டி 760 மி.கி. நூலும், 4,775 மி.மீட்டர் துணியும் உற்பத்தி செய்யப்பட்டன. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது அய்ந்தாண்டுத் திட்டங்களின் இறுதி ஆண்டுகளான 1960-61, 65-66, 73-74 ஆண்டுகளில் முறையே 4,649; 4,401; 4,200 மி.மீட்டர்கள் துணிகள் உற்பத்தியாயின. 1979-80ல 4,085 மி.மீ., 84-85ல் 3,432 மி.மீ. எனவும் சுருங்கி விட்டது. 89-90ல் 2,667 மில். சதுர மீட்டர், 90-91ல 2,589, 91-92ல் 2,376, 92-93ல் 2,000, 2000-01ல் 1,670 , 2001-02 1,546 மி. சதுர மீட்டர் (அனைத்தும் துணி ஆலைகளில் மட்டும் உற்பத்தியானவை. கைத்தறி, விசைத் தறி (powerloom) உற்பத்தி இதில் சேர்க்கப்படவில்லை) எனவும் குறைந்து விட்டது. இவ்வாறு ஆலை துணிகளின் உற்பத்தி குறைந்ததற்கு விசைத்தறி துறையின் வளர்ச்சி முக்கிய காரணமாகும். துணி ஆலைகள் தொடங்க இனி அரசனுமதி (licence) தேவையில்லை என (delicensed) 1993ல் சட்டமியற்றப்பட்டது.

**ன்பதாவது அய்ந்தாண்டுத் திட்டம் (1997-2002):** துணி அமைச்சகத் ற்கு ரூ. 1500 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2001-02ல் ஆலைகள் 2600 ல்லியன் சதுர மீட்டர், பிற பிரிவுகள் (decentralised) 41,400 மி.ச.மீ. துணி ற்பத்தி செய்யவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சமீபத்திய ஆண்டு ளின் உற்பத்தியளவை பட்டியல் விளக்குகின்றது.

**ாழில் நுணுக்க மேம்பாட்டு நிதித் திட்டம்** (TUFS - Technology adation Fund Scheme) புதிதாக ஏற்படுத்தப்பட்டு, 01.04.99 முதல் ல்படுகின்றது. ஆலைகள் தொழில் நுணுக்க மேம்பாட்டிற்காக வாங்கும் ின் வட்டியில் 5% நிதியை இந் நிதித்திட்டம் கொடுத்துவிடும். இதனால் வாக புதிய தொழில் நுணுக்கங்களுக்கு ஆலைகள் மாறும்.



இந்நிதித்திட்டத்தில் 1999 - 2000ல் ₹746 கோடி, 2006 -2007ல் ₹ 26,605 கோடி, 2007-2008ல் ₹ 6,854 கோடி, 08-09ல் ₹ 21,826, 09-10ல் ₹ 8,140 கோடி என்றும் ஆரம்பம் முதல் 2010 சூன் இறுதி வரை ₹ 74,627 கோடியும் செலவிடப்பட்டன.[1]

**பட்டியல்: சில ஆண்டுகளில் துணி உற்பத்தி** **(மில்லியன் சதுர மீட்டர்)**

| பிரிவு | 89-90 | 91-92 | 2001-02 | 06-07 | 09-10 | 10-11 |
|---|---|---|---|---|---|---|
| ஆலை | 2,667 | 2,376 | 1,546 | 1,746 | 2,016 | 2,205 |
| விசைத்தறி | 14,007 | 16,089 | 32,259 | 44,383 | 50,669 | 52,575 |
| கைத்தறி | 3,924 | 4,123 | 7,585 | 6,536 | 6,806 | 6,949 |
| கதர் + பிற | கி | கி | 644 | 724 | 812 | 812 |
| மொத்தம் | 20,598 | 22,588 | 42,034 | 53,389 | 60,333 | 62,575 |

**குறிப்பு :** விசைத்தறியில் பின்னலாடை விவரங்களும் சேர்த்தது.

**ஆதாரம் :** 2004க்கு பின் GOI, Ministry of Textiles, *Annual Report*. 2011-12, p.37

**பருத்தி நூல் உற்பத்தி:** பருத்தி நூல்களின் உற்பத்தி 1950ல் 533 மில்லியன் கிலோ கிராமாக இருந்தது 80-81ல் 1,067, 90-91ல் 1510, 2000-01ல் 2,267, 01-02ல் 2,212, 06-07ல் 2,824 மி.கி.கி 07-08ல் 2948, 08-09ல் 2,896ல் 09-10ல் 3,079, 10-11ல் 3,490 மி.கி.கி என்றும் நீண்டுள்ளது.

**ஆலைகள் :** நம் நாட்டில் 1994 மார்ச் இறுதியில் 909 நூற்பு ஆலைகள், 266 ஒருங்கிணைந்த (நூற்பு + நெசவு) ஆலைகள் ஆக மொத்தம் 1,175 ஆலைகள் இருந்தன. இது 2011 நவம்பர் இறுதியில் 1,946 என்று உயர்ந்தது. ஆலைகளில் 43.13 மில்லியன் நூற்பு கருவிகளும் (Spindles), 52,000 தறிகளும் நிறுவப்பட்டிருந்தன.

**ஏற்றுமதி :** ஆயத்த ஆடைகள், துணி, பட்டு, நூல் போன்ற அனைத்து வகை துணி பொருள்களின் நிகர ஏற்றுமதி 1990-91ல் ₹7,995.13 கோடி, 2000-01ல் ₹47,528.59 கோடி, 01-02ல் ₹42,071.17 கோடி, 06-07ல் ₹78,683 கோடி, 08-09ல் ₹89,306.2 கோடி, 09-10ல் ₹ 99,704.14 கோடி, 10-11ல் ₹ 1,13,845.11 கோடி என்றும் உயர்ந்துள்ளது.[2]

**தமிழ்நாடு:** தமிழகம் துணி உற்பத்தியில் இந்தியாவிலேயே நான்காவது மாநிலமாகவும், நூல் உற்பத்தியில் முதலாவதாகவும் திகழ்கிறது. நூற்பாலைகளைவிட நெசவாலைகளில் ஆதாயம் அதிகம். 2005-06ல் இந்தியாவில் ஆலைகளில் உற்பத்தியான பருத்தி நூல்களில் 45.6% தமிழகத்தில் உற்பத்தி ஆனாலும், 10% பருத்தி துணிகள் தான் உற்பத்தியானது.[3] அதிக நெசவாலைகளை தமிழகத்தில் தோற்றுவிக்க ஆவன செய்ய வேண்டும்.

**துணி இயந்திரங்களின் உற்பத்தி:** இந்தியா துணி ஆலைகளுக்கு வேண்டிய எல்லா இயந்திரங்களையும் திட்ட ஆரம்ப காலத்தில் இறக்குமதி செய்து

(1) (2) GOI, Ministry of Textiles, *Annual Report*, 2011-12, P.P. 39, 52
(3) C.S.O., *Statistical Abstract - India*, 2007, P.P. 182-3.

கொண்டிருந்தது. இன்று அவைகள் பழங்கதையாகி விட்டன. இவ்வியந்திரங்களை நாம் தற்போது உற்பத்தி செய்து, ஏற்றுமதியும் செய்கின்றோம்.

நூற்பு, நெசவு, சாயம் ஏற்றுதல் போன்ற எல்லாவகை இயந்திரங்களையும் இந்தியா உற்பத்தி செய்கின்ற மதிப்பு 1961ல் ₹ 88 கோடியாக இருந்தது. 1980ல் ₹ 200 கோடி, 96–97ல் ₹ 1,291 கோடி, 2000–01ல் 1,308 கோடி, 06–07 முதல் வரிசையாக ₹ 5,753 + ₹ 6,155 + ₹ 4,063 கோடி என்றும் உயர்ந்துள்ளது. இவ்வகை இயந்திரங்களின் ஏற்றுமதி மதிப்பு 1974–75ல் ₹ 17.27 கோடியாக இருந்தது. 1975–76ல் ₹ 23 கோடி, 1990–91ல் ₹ 156 கோடி, 94–95ல் ₹ 206 கோடி, 96–97ல் ₹ 313 கோடி, 2000–01ல் ₹ 427 கோடி, 06–07 முதல் வரிசையாக ₹ 425 + ₹ 640 + ₹ 607 கோடி என்றும் பெருகியுள்ளது.[1]

## எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள்

**1. பழைய இயந்திரங்களை மாற்றியமைத்தல் :** நீண்ட காலமாக துணித் தொழில் நம் நாட்டில் இருப்பதால், பல ஆலைகள் தங்களுடைய தேய்ந்த பழைய உற்பத்தி முறையிலான இயந்திரங்களை மாற்றி புதிய இயந்திரங்களை நிறுவ போதிய நிதிவசதி இல்லாமலிருக்கின்றன. இப்பழைய இயந்திரங்களின் நவீன ரக துணிகளை நெய்ய முடியாததுடன் உற்பத்திச் செலவும் அதிகரித்து விடுகின்றது.

**2. தானியங்கித் தறிகள் :** நவீனத் தானியங்கித் தறிகளையும் பயன்படுத்தினால்தான் நம் துணிகளை வெளிநாட்டினர் விரும்பி வாங்குவர். அந்தந்த நாட்டின் மொத்தத் தறிகளில் அமெரிக்காவில் 100%, சப்பானில் 77.5%, செர்மனியில் 55.6% தானியங்கி தறிகளாக இருக்கும்போது, அதுவே இந்தியாவில் 8.3% மட்டுமேயாகும். தானியங்கித் தறிகளை நிறுவ போதிய நிதி வசதி இல்லாததுடன், தொழிற்சங்கங்களும் இதனை எதிர்க்கின்றன.

**3. கட்டுப்பாடுகள் :** கைத்தறி, கதர் தொழில்களை ஆதரிக்கும் நோக்கத்துடன் அரசு ஆலை துணிகளுக்கு உற்பத்தி, விலை, தரம் ஆகியவற்றில் பல்வேறு நியதிகளையும், கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றன. இதனால் ஆலைத் தொழில் செழித்தோங்க முடியவில்லை.

**4. எரிபொருள் தட்டுப்பாடு :** நிலக்கரி, மின்சாரம் போன்ற எரிபொருட்கள் தட்டுத்தடங்கல் இல்லாமல் கிடைப்பதில்லை. இதனால் ஆலைகள் முழுவீச்சில் செயற்பட முடிவதில்லை.

**5. நலிவுற்ற ஆலைகள் :** ஏராளமான ஆலைகள் நட்டத்தில் அல்லது சொற்ப இலாபத்தில் இயங்குகின்றன. 1994 மார்ச் இறுதியில் நாட்டில் 1.73 இலட்சம் தொழிலாளர்களை பாதித்து 132 ஆலைகள் மூடிக் கிடந்தன. இதுவே 31.08.2010ல் 450 (நூற்பு 380 + ஒருங்கிணைந்த 70) ஆலைகள் மூடிக்கிடந்தன.

**6. தொழிற் செறிவு :** இந்தியாவில் உள்ள மொத்த கதிர்கள் மற்றும் தறிகளில் சுமார் 60 மும்பையில் அமைந்துள்ளது. இதனால் பல்வேறு சிக்கல்கள் எழுகின்றன.

**7. வரிச்சுமை :** இத்தொழின் மீது போடப்பட்டுள்ள வரி அதிகம் எனக் கூறப்படுகின்றது.

---

1. GOI, Ministry of Heavy Industries and Public Enterprises, *Annual Report*, 2009-10, P. 38



**8. போதா நிதி :** ஆலைகளின் பல்வேறு செலவுகள் அதிகரித்துள்ளன. இந்த அளவிற்கு வணிக வங்கிகள் ஆலைகளுக்குக் கடன் கொடுப்பதில்லை. எனவே உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

**9. செயற்கை துணிகளின் போட்டி :** பல்வேறு செயற்கை நூல் மற்றும் துணிகளின் போட்டியால் பருத்தித் துணித் தொழில் பெரிதும் நலிந்துள்ளன.

**10. சில வகை துணிகள் உற்பத்தி :** அதிக இலாபம் தரக்கூடிய உயர்ந்த ரகத் துணிகளையே தனியார் ஆலைகள் பெரிதும் உற்பத்தி செய்கின்றன. ஏழைகளுக்கு வேண்டிய குறைந்த விலைத் துணிகளைப் போதிய அளவிற்கு உற்பத்தி செய்வதில்லை.

**11. ஏற்றுமதியில் போட்டி :** சமீப காலங்களில் சப்பான், சீனா, ஹாங்காங், கொரியா ஆகிய நாடுகள் தரமான துணிகளைக் குறைந்த விலைக்கு விற்பதால் அவைகளை இந்தியா சமாளிக்க வேண்டியுள்ளது.

**12. ஏற்றுமதித் தடை :** இந்தியத் துணிகளை இறக்குமதி செய்யும் அய்ரோப்பிய மற்றும் அமெரிக்க அய்க்கிய நாடுகள் பல்வேறு கட்டுப்பாடுகளை விதிப்பதால், நம் ஏற்றுமதி குறைகின்றது.

**13. தொழிலாளர் பணிக்கு வராமலிருத்தல் :** வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் சரியாக வேலைக்கு வருவதில்லை. உதாரணமாக மும்பை துணி ஆலைகளில் மொத்தத் தொழிலாளர்களில் வேலைக்கு வராதவர்கள் 1961ல் 11.9% ஆக இருந்தது படிப்படியாக வளர்ந்து 1979ல் 25.5% ஆக உயர்ந்து விட்டது. இதனால் இயந்திரங்களின் முழுத்திறனையும் பயன்படுத்த முடியாமல் உற்பத்தி குறைகின்றது.

**14. குறைவான தொழிலாளர் உற்பத்தித் திறன் :** சராசரியாக ஓர் ஆலைத் தொழிலாளி அமெரிக்காவில் 60 தானியங்கி தறிகளிலும், சப்பானில் 48 தானியங்கி தறிகளிலும் நெய்யும்போது இந்தியாவில் 2 முதல் 4 வரையிலான சாதாரணத் தறிகளில் மட்டுமே நெய்கின்றார். இதனால் செலவு அதிகமாகின்றது.

**15. பருத்தி அளிப்பில் குறைகள் :** முக்கிய மூலப்பொருளான பருத்தி தரம் குறைந்ததாகவும், விலை அதிகமாகவும் உள்ளது. சரியாக முற்றாத பஞ்சுகளும் தூசுகளும், குட்டை இழைப் பருத்தி கலந்தவைகளாகவும் ஆலைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

**16. குறைந்த சராசரி உற்பத்தி :** இந்தியாவில் ஏக்கருக்கு சராசரி பருத்தி உற்பத்தி குறைவாயுள்ளது. 1981-82ல் எஃக்டேருக்கு சராசரியாக விளையு பருத்தியின் அளவு எகிப்தில் 1,022 கி.கி. ஆகவும், சோவியத் ரஷ்யாவில் 92 அமெரிக்காவில் 605, சீனாவில் 563, பாகிஸ்தானில் 371, உலகச் சராசரி 4 கி.கி. ஆக இருக்கும்போது இந்தியாவில் 174 கி.கி. ஆகத்தான் இருந்த எனவே விலையும் அதிகமாயுள்ளது. இந்தியாவில் இது 96-97ல் 265 கி. 1999-2000ல் 225 கி.கி. ஆகவும் மாறியுள்ளது.

**17. உற்பத்தி சீராக இல்லை :** பருத்தி உற்பத்தியளவு சீராக இருப்பதில்ல அடுத்தடுத்த ஆண்டுகளில் உற்பத்தியான அளவு மிகுந்த ஏற் தாழ்வாயுள்ளது.

It is expected that by 2017 India's will consuming 285 million tones sugar.

### சர்க்கரை முன்னேற்ற நிதி (Sugar Development Fund)

நாடாளுமன்றத்தில் 1982ல் சட்டமியற்றப்பட்டு சர்க்கரை முன்னேற்ற நிதி உருவாக்கப்பட்டது. சர்க்கரை உற்பத்தியில் வரி விதிக்கப்பட்டு இந்நிதி உருவாக்கப்படுகின்றது. நிலவுற்ற ஆலைகள் நவீனப்படுத்தப்பட குறைந்த வட்டிக்கு இந்நிதியிலிருந்து கடன் கொடுக்கப்படுகின்றது. சர்க்கரைத் தொழில் வளர்ச்சிக்கான ஆய்வுகளுக்கும் நிதி உதவி தருகின்றது. சர்க்கரை முடைக்கால கையிருப்பை சேமிக்க கிடங்குகள் கட்டவும் கடன் வழங்குகின்றது. கரும்பு வளர்ச்சி ஆய்வுக்கும் உதவுகின்றது.

### சிக்கல்கள்

சர்க்கரைத் தொழில் வளர்ச்சி இனிப்பாக இல்லை. கசப்புகளைத் தொகுத்துக் கூறலாம்.

**1. சீராக இல்லாத கரும்பின் அளிப்பு :** ஆலைகளுக்கு வரும் கரும்பின் அளவு சீராக இருப்பதில்லை. ஆண்டுக்காண்டு உற்பத்தியில் மிகுந்த ஏற்ற இறக்கமாக உள்ளது. கரும்பு விளையும் கால நிலை, ஆலை வாயில் கரும்பின் விலை, பிற விவசாயப் பொருட்களின் விலை, ஆலைகள் கரும்பு விவசாயி களுக்குத் தரவேண்டிய பாக்கித் தொகை, வெல்லம் காய்ச்சினால் கிடைக்கக் கூடிய வருவாய் இதுபோன்ற காரணிகளின் அடிப்படையில் ஆலைக்கு வரும் கரும்பின் அளவு மாறுபடுகின்றது.

**2. வெல்லத்தின் போட்டி :** நாட்டு சர்க்கரை, வெல்லம் இவைகளின் உற்பத்தியிலும் விலையிலும் அரசு கட்டுப்பாடு ஏதுமில்லை. எனவே கரும்பு குறைவாக விளையும் ஆண்டுகளில் சர்க்கரையின் விலையைவிட நாட்டுச் சர்க்கரை மற்றும் வெல்லத்தின் விலை வேகமாக உயர்கின்றது. இந்த நன்மைக்காக கரும்பை வெல்லம் அல்லது நாட்டுச் சர்க்கரைக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்துகின்றனர். இதனால் சர்க்கரை ஆலைகளுக்குப் போகக்கூடிய கரும்பினளவு வெகுவாகக் குறைகின்றது. ஆலைகள் நட்டமடைகின்றன.

**3. ஆலைகள் குவிந்துள்ளன :** 2000-01ல் நாட்டில் மொத்தமிருந்த 436 ஆலைகளில் உத்திரப் பிரதேசத்தில் 110, மராட்டியத்தில் 137 என்று குவிந்துள்ளன. கரும்பினை வெட்டியவுடன் சர்க்கரைக்குப் பிழிய வேண்டும். கரும்பை வெட்டி நேரம் ஆக ஆக கிடைக்கும் சர்க்கரையின் அளவு குறையும். ஆலைகள் ஒருசில இடங்களில் குவிந்திருப்பதால் வெகுதொலை தூரத்திலிருந்து கரும்பை ஆலைக்குக் கொண்டுவர வேண்டியிருக்கின்றது. இந்தக் கால தாமதத்தால் சர்க்கரை அளவும் குறைந்துவிடுகின்றது.

**4. ஒவ்வாத இயந்திரங்கள் :** பல்லாண்டுகட்கு முன்பாகவே ஆரம்பிக்கப் பட்ட ஆலைகளின் இயந்திரங்கள் தேய்ந்தவையாக உள்ளன, எனவே உற்பத்திச் செலவு அதிகரித்துவிடுகின்றது. புதிய இயந்திரங்களை வாங்கப் போதிய நிதி வசதி இல்லாமல் பல ஆலைகள் திணறுகின்றன. உத்திரப் பிரதேசம், பீகார் இங்கெல்லாம் இச்சிக்கல் அதிகம்.

1. ISMA : *Indian Sugar*, February, 2003, P. 965.

[illegible]

8. அதிக உற்பத்திச் செலவு : இந்தியாவில் [illegible] சர்க்கரைச் சத்தும் குறைவு; [illegible] ஆலைகளின் கரும்பு பிழியும் திறன் [illegible] சர்க்கரையின் உற்பத்திச் செலவு அதிகமாகின்றது.

9. அதிக வரி : மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு சர்க்கரைத் தொழில் [illegible]

10. அதிக விலை : பல்வேறு காரணங்களால் இந்திய சர்க்கரையின் விலை பிற நாடுகளைவிட அதிகமாயுள்ளது. இதுடன் கரும்புச் சந்தை [illegible] நம் நாட்டில் குறைவில்லை.

11. அரசாங்கத்தின் நிலையில்லாக் கொள்கை : நீண்ட காலக் கண்ணோட்டத்துடன் அரசாங்கம் சர்க்கரைக் கொள்கையை வகுப்பதில்லை. அவ்வப்போது எழும் சிக்கல்களுக்கேற்ப கொள்கைகளை வகுக்கின்றது. [illegible] விலையில் விற்கப்படும் சர்க்கரையின் அளவு, சர்க்கரையின் ஏற்றுமதி, இறக்குமதி, கரும்பின் விலை போன்றவற்றில் அரசாங்கம் நிலையான கொள்கையைப் பின்பற்றுவதில்லை.

12. இலாபகரமற்ற ஏற்றுமதி : இந்தியாவின் நுகர்ச்சிக்குப் போக எஞ்சியதை ஏற்றுமதி செய்யலாம் என்ற நிலையில்லை. பன்னாட்டு சர்க்கரை அமைப்புத்தான் (International Sugar Organization) நம் நாட்டின் ஏற்றுமதி [illegible] அளவை நிர்ணயிக்கும். மேலும் உலக அங்காடியில் சர்க்கரையின் விலை குறைவு; நம் நாட்டில் உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதால் பல [illegible] நட்டத்தில் ஏற்றுமதி செய்கிறோம்.

[illegible]. பீட் கிழங்குச் சர்க்கரை : நம் நாட்டில் கரும்பிலிருந்து தான் சர்க்கரை [illegible]கின்றோம். ஆனால் பீட் கிழங்கிலிருந்தும் ஆலைகளில் சர்க்கரை உற்பத்தி செய்யலாம். 1991ல் உலகில் உற்பத்தியான மொத்த சர்க்கரையில் 33.7% பீட் கிழங்கிலிருந்து தயாரிக்கப்பட்டதாகும். கரும்பு விளைய 10 மாதமாகும்; 8



முதல் 15% வரை சர்க்கரைச் சத்துள்ளது. ஆனால் பீட் கிழங்கு 6 அல்லது 7 மாதங்களில் அறுவடை செய்யலாம். இதில் 15 முதல் 20 விழுக்காடு வரை சர்க்கரைச் சத்துள்ளது. பீட் கிழங்கையும் சர்க்கரை உற்பத்திக்குப் பயன்படுத்தினால் பல்வேறு சிக்கல்கள் குறையும்.

## தீர்வுகள்

1. ஆலைகளுக்கு கரும்பு அளிக்கும் விவசாயிகளின் பதிவு முறையை சீரமைப்பதன் மூலம் ஓரளவிற்கு கரும்பின் அளிப்பை சீராக்கலாம். ஆலைகளே தனது நிலத்தில் கரும்பைப் பயிர் செய்யலாம்.

2. சர்க்கரையின் விலையை ஓரளவிற்குக் குறைவாக வைத்திருந்தால் வெல்லத்தின் விலையும் உயராது. வெல்லம் விலை குறைவாக இருந்தால் கரும்பை வெட்டி வெல்லம் மற்றும் நாட்டுச் சர்க்கரை பிழிய பயன்படுத்தப்படாமல் சர்க்கரை ஆலைக்கு அதிகக் கரும்பு கிடைக்கும்.[1]

3. தற்போது ஆலையில்லாத பகுதிகளில் மட்டுமே புதிய ஆலைகளை நிறுவவேண்டும்.

4. தனியாக சர்க்கரை ஆலைகளுக்கென நிதி நிறுவனம் நிறுவி, புதிய இயந்திரங்களை வாங்கக் கடன் கொடுக்கலாம்.

5. இலாபம் அதிகமாயிருக்கும் வகையில் ஆலைகளில் கரும்பு பிழியும் திறனும் அதிகமாயிருத்தல் நலம்.

6. குறுகிய கால கரும்பு வகைகளை உருவாக்கவேண்டும்.

7. ஆலைகளிலிருந்து கிடைக்கும் எல்லாத் துணைப்பொருள்களையும் நன்முறையில் பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக கரும்புச்சக்கையை காகிதம் தயாரிக்கவும், வெல்லப்பாகை சாராயம், இரசாயன உரம், கால்நடைத் தீவனம் போன்றவற்றைத் தயாரிக்கவும் பயன்படுத்தலாம்.

8. அடிப்படை உற்பத்திச் செலவைக் குறைத்தல் வேண்டும்.

9. வரிக் கட்டமைப்புக்களைச் சீரமைத்தல் வேண்டும்.

10. சர்க்கரை முடைக்காலக் கையிருப்பை அரசாங்கம் வைத்துக் கொள்வதன் மூலம் ஓரளவிற்கு சர்க்கரையின் விலையைச் சீராக வைத்திருக்கலாம். இந்நோக்கத்தில் ஏற்றுமதி அளவையும் நிர்ணயிக்கலாம்.

11. தொலைநோக்குச் சிந்தனையுடன் அரசு நீண்ட காலச் சர்க்கரைக் கொள்கைகளை உருவாக்கிட வேண்டும். கரும்பு அறுவடையின் போது விலையை நிர்ணயிக்கும் தற்பொழுதுள்ள நடைமுறையை கைவிடல் வேண்டும். கரும்பு ஒரு தடவை நட்டால் அந்நிலத்தில் அது 2 அல்லது 3 ஆண்டுகள் விளையும். எனவே 3 ஆண்டுகளுக்கு முன்பே சர்க்கரைக் கொள்கையை அறிவித்தல் வேண்டும். இதில் கரும்பு விலை, சர்க்கரை விலை, ஏற்றுமதி, இறக்குமதி அளவு போன்ற எல்லா அம்சங்களையும் குறிப்பிட வேண்டும்.

12. இலாபகரமாக ஏற்றுமதி செய்தல் வேண்டும்.

1. Arun Kumar, *The Economic Times*, 20.11.84

Scanned with CamScanner

பீட்கிழங்கு சர்க்கரையும் உற்பத்தி செய்யலாம்.

13. முன்பேகுறிப்பிட்டவாறு இதனால் ஆலைகளுக்கு இன்னும் அதிக நாட்கள் வேலை கிடைக்கும். உற்பத்திச் செலவுக் குறையும். ஆலைகள் கரும்பை மட்டுமே எதிர்பார்க்கும் அவல நிலை ஒழியும். தற்போதுள்ள சர்க்கரை இயந்திரங்களில் மிகச்சிறு மாற்றங்களைச் செய்தால் பீட்கிழங்கையும் சர்க்கரை செய்ய பயன்படுத்தலாம்.

14. நாட்டுச் சர்க்கரை மற்றும் வெல்லம் பிழிய கரும்பைப் பயன்படுத்துவதைத் தடுக்க நினைக்கக் கூடாது. இவைகள் ஏழைகளின் இனிப்பாகும். மேலும் இவைகளில் சர்க்கரையை விட பல உலோகப் பொருட்களின் சத்தும் அதிகம்.

15. சர்க்கரை விலை அதிகம் விற்பதால் கிடைக்கும் இலாபத்தின் ஒரு பகுதியை விவசாயிகளுக்கு போனஸ் என்ற முறையில் கொடுக்க ஆலைகள் முன்வர வேண்டும். இதனால் ஆலைகளுக்கு வேண்டிய கரும்பு கிடைக்கும். இம்முறை விடுதலைக்கு முன் நம் நாட்டில் அமுலில் இருந்தது.

## ஈ. தேயிலைத் தொழில் (Tea Industry)

**முக்கியத்துவம் :** உலக நாடுகளில் இந்தியா தேயிலை உற்பத்தியிலும் நுகர்ச்சியிலும் முதன்மையாகத் திகழ்கின்றது. 1986-87ல் ரூ.615 கோடிக்கு 200.04 மில்லியன் கிலோ கிராம், 2000-01ல் ரூ.1,976 கோடிக்கு 202.4 மி.கி.கி. 2001-02ல் ரூ. 1,719 கோடிக்கு 180.1 மி.கி.கி. தேயிலையும் ஏற்றுமதி செய்யப்பட்டது. உலகத் தேயிலை உற்பத்தியில் சுமார் 1/4 பகுதி இந்தியாவில் விளைகின்றது.

**பயிரிடல் :** தேயிலைச் செடிகள் பயிரிடப்பட்ட 5ஆம் ஆண்டில் இருந்துதான் பலன் தர ஆரம்பிக்கும். 1984 ஆம் ஆண்டு கணக்குப்படி ஒரு எஃக்டேர் தேயிலைத் தோட்டத்தை உருவாக்குவதற்கு ரூ. 70,000 செலவாகும்.[1] ஆட்கள் தான் செடியிலிருந்து தேயிலையை எடுக்க வேண்டும். நுனிக் கொழுந்து இலைதான் தரமுடையது. அதற்குக் கீழே உள்ளவைகள் தரம் குறைந்தவை. எல்லா இலைகளையும் சேகரிக்க முடியாது.செடியிலிருந்து பறித்த 24 மணி நேரத்திற்குள் அவற்றை இயந்திரங்கள் மூலம் பதப்படுத்தியாக வேண்டும். தோட்டத்தில் அதிக ஆள் தேவைப்படக் கூடியதாகவும் தொழிற்சாலையில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதாகவும் உள்ளது. தமிழ்நாட்டில் இது முக்கியத் தொழில்களில் ஒன்றாகும்.

### வளர்ச்சி

**நில அளவு, உற்பத்தி :** இந்தியாவில் 1947ல் மொத்தம் 3.1 இலட்சம் எஃக்டேர் நிலத்தில் 255.03 மில்லியன் கிலோ கிராம் பயிரிடப்பட்ட தேயிலை 1955ல் 3.2 ல.எ. நிலத்தில் 308 மி.கி.கி, 1960ல் 3.37 ல.எ. நிலத்தில் 320.52 மி.கி.கி. 1965ல் 3.45ல.எ. நிலத்தில் 366.4 மி.கி.கி, 1973ல் 3.62 ல.எ. நிலத்தில் 472.0 மி.கி.கி, 1977ல் 3.69 ல.எ. நிலத்தில் 566.2 மி.கி.கி, 1980ல் 3.81 ல.எ. நிலத்தில் 569.2 மி.கி.கி, 1985ல் 3 ல.எ. நிலத்தில் 656 மி.கி.கி. 1990ல் 4.17 ல.எ. நிலத்தில் 720.34 மி.கி.கி, 2000-01ல் 848 மி.கி.கி. 2001-02ல் 847 மி.கி.கி. என்று உற்பத்தி அதிகரித்தது. சமீபகால விவரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

[1] *The Economic Times,* 08.08.84.



**தேயிலை உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி**

(மதிப்பு ரூ. கோடியில்; அளவு : மில்லியன் கிலோ கிராமில்)

| ஆண்டு | உற்பத்தி அளவு | ஏற்றுமதி அளவு | ஏற்றுமதி மதிப்பு | இறக்குமதி அளவு | இறக்குமதி மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1950 | 275.00 | – | – | – | – |
| 1951 | 285.40 | – | – | – | – |
| 1961 | 354.40 | 206.30 | 124.25 | – | – |
| 1965 | 366.00 | 199.00 | கி | – | – |
| 1973 | 472.00 | 188.20 | 142.70 | – | – |
| 1978 | 564.00 | 176.10 | 362.90 | – | – |
| 1980 | 569.00 | 224.00 | 229.00 | – | – |
| 1985 | 656.00 | 214.00 | 695.30 | – | – |
| 1990 | 720.34 | 199.10 | 1,070 | – | – |
| 1991–92 | 727.00 | 216.50 | 1,212.3 | – | – |
| 1996–97 | 787.00 | 169.00 | 1,031.0 | – | – |
| 1997–98 | 835.6 | 211.3 | 2003.2 | 2.6 | 17.8 |
| 1998–99 | 855.2 | 205.9 | 2191.8 | 8.9 | 64.7 |
| 1999–00 | 836.8 | 188.9 | 1796.3 | 10.4 | 62.0 |
| 2000–01 | 848.4 | 203.6 | 1889.8 | 15.2 | 95.5 |
| 2001–02 | 847.4 | 190.0 | 1695.8 | 16.8 | 86.7 |
| 2002–03 | 845.97 | 184.4 | 1665.04 | 22.49 | 105.32 |
| 2003–04 | 850.5 | 183.07 | 1636.99 | 11.34 | 66.23 |
| 2004–05 | 906.84 | 205.81 | 1924.71 | 32.53 | 145.15 |
| 2005–06 | 948.94 | 196.67 | 1793.58 | 17.41 | 102.77 |
| 2006–07 | 947.12 | 218.15 | 2045.72 | 20.78 | 110.88 |

ஆதாரம் : GOI, *Economic Survey, 2007-08* P.170 & Previous Reports.

**மகசூல் :** சராசரியாக ஒரு எஃக்டேர் நிலத்தில் விளைந்த தேயிலை 1950ல் 87[illegible] கி.கி. என இருந்தது. 60ல் 969 கி.கி., 70ல் 1174 கி.கி., 80ல் 1491 கி.கி., 90ல் 1,72[illegible] கி.கி., 96–97ல் 1,875 கி.கி., 99–2000ல் 1,702 கி.கி., 2001–02ல் 1,675 கி.கி [illegible] 05–06ல் 1,774, 06–07ல் 1,828 என்றும் வளர்ச்சியடைந்துள்ளது. தீவிர சாகுபடி திட்டத்தினால் இவ்வாறு மகசூல் அதிகரித்துள்ளது. 2006–07ல் 5.2 இலட்ச [illegible] எஃக்டேரில் தேயிலை பயிரிடப்பட்டது.

**ஏற்றுமதி – இறக்குமதி** இந்தியத் தேயிலை ஏற்றுமதி அளவில் அதி[illegible] முன்னேற்றமில்லையென்றாலும், ஏற்றுமதி மதிப்பில் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இரஷ்[illegible] ஆப்கானிஸ்தான், போலந்து, அயர்லாந்து, இங்கிலாந்து, எகிப்து, அமெரிக்கா மற்றும் [illegible] நாடுகள் இந்திய தேயிலையை விரும்பி வாங்குகின்றன. சோவியத்நாடு சிதறுண்ட[illegible] ரஷ்ய மக்களின் சராசரி வருவாய் குறைந்து விட்டதால் சமீப ஆண்டுகளில் ஏற்று[illegible] குறைந்துவிட்டது. மொத்த உலகத் தேயிலை ஏற்றுமதியில் இந்திய தேயிலை ஏற்றுமதி[illegible] பங்கு வரவரக் குறைந்து கொண்டே வருகிறது. சீனா, கென்யா, இந்தோனே[illegible]

போன்ற நாடுகளின் போட்டி அதிகரித்ததே இதற்கு காரணமாகும். மேலும் சில நாடுகள் கணிசமான அளவிற்கு உள்நாட்டிலேயே உற்பத்தியும் செய்யத் தொடங்கிவிட்டன. இதனால் மொத்த தேயிலை உற்பத்தியில் இந்தியாவின் உற்பத்திப் பங்கு குறைந்து கொண்டு வருகின்றது.

உலக வாணிப அமைப்பில் (WTO) இந்தியா கையெழுத்திட்டதால் தேயிலை இறக்குமதியையும் 95-96 முதல் அனுமதிக்கின்றோம்.

ஏலவிற்பனை குன்னூர், கோயம்புத்தூர் உட்பட இந்தியாவில் 7 தேயிலை ஏல விற்பனை நிலையங்கள் உள்ளன. 1981 முதல் சிங்கப்பூரிலும் ஏல விற்பனை தொடங்கியதை அடுத்து பன்னாட்டு தேயிலை ஏல விற்பனை நிலையங்கள் 9 ஆக உயர்ந் துள்ளது. இதில் இந்தியாவில் கொல்கத்தா மற்றும் கொச்சி ஆகிய 2 இடங்களும் அடங்கும்.

உலகில் மிக அதிகமாக தேயிலை இந்தியாவில் 1998ல் உற்பத்தியானாலும், உற்பத்தியில் 24% தான் ஏற்றுமதியானதால், உலகில் ஏற்றுமதியில் இந்தியா நான்காவது இடம்தான் வகிக்கின்றது. இலங்கை உற்பத்தியில் 95% ஏற்றுமதி செய்து முதல் இடம் பிடித்துள்ளது.[1]

### சிக்கல்கள்

இந்தியத் தேயிலைத் தொழிலை எதிர்நோக்கியுள்ள சிக்கல்களைத் தொகுத்து கூறலாம்.

**1. அதிக உற்பத்திச் செலவு :** கூலி, உர விலை, நிர்வாகச் சீர்கேடு ஆகியவைகளினால் உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளது. அதிக விலையால் நம் ஏற்றுமதி பாதிக்கப்படுகிறது.

**2. தரம் :** தேயிலையின் தரம் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. இந்நோக்குடன் சி.டி.சி. (C.T.C. Tea-Cut Torn and Curled Tea) தேயிலை உற்பத்தி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**3. ஏற்றுமதியில் போட்டி :** சீனா, கென்யா, இந்தோனேசியா, ஸ்ரீ லங்கா போன்ற நாடுகளின் கடுமையான ஏற்றுமதி போட்டிகளை இந்தியா சமாளிக்க வேண்டியுள்ளது. தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பை ஏற்படுத்த இந்தியா எவ்வளவோ முயன்றும் இதுவரை நிறைவேறவில்லை. இக்கூட்டமைப்பு ஏற்படுமானால் ஏற்றுமதி அளவிலும், விலையிலும் நாடுகள் தங்களுக்குள்ளே ஒப்பந்தம் செய்துகொண்டு, அதிக இலாபம் ஈட்ட முடியும்.

**4. புகழ்பெற்ற நிறுவனங்கள் :** இங்கிலாந்திலுள்ள சில பன்னாட்டு நிறுவனங்களே உலகத் தேயிலை அங்காடியைக் கட்டுப்படுத்துகின்றன. இவைகளுடன் வளர்ந்து வரும் நாடுகளிலுள்ள தேசிய நிறுவனங்கள் போட்டி போட இயலவில்லை.

**5. போலிகள் :** உலகப் புகழ்பெற்ற இந்திய "டார்ஜிலிங் தேயிலை" பெயரை பிறநாட்டு நிறுவனங்கள் தவறாக பயன்படுத்தி விற்கின்றன. உதாரணமாக டார்ஜிலிங்கில் 10 மில்லியன் கிலோ கிராம் விளைந்தாலும் அப்பெயரில் 40 மி.கி.கி. உலகில் விற்கப்படுகிறது.

**6. ஏராளமான இடைத்தரகர்கள் :** தேயிலை உற்பத்தியாளர்கள், தரகர்கள் (Brokers), பதப்படுத்துபவர்கள், மொத்த விற்பனையாளர்கள், சில்லரை

1. GOI, *Economic Survey*, 1999 - 2000 P. 135.



விற்பனையாளர்கள் போன்ற அதிக எண்ணிக்கை இடைத்தரகர்கள் ஒவ்வொரு வரும் தங்களுக்குரிய இலாபத்தை ஈட்டுவதால் நுகர்ச்சியாளர் கொடுக்கின்ற விலையில் ஒரு பகுதியே உற்பத்தியாளருக்குப் போய்ச் சேருகின்றது.

**7. அதிக வரி :** இப்பொருளின் தன்மைக்கேற்ப உற்பத்தி வரி, ஏற்றுமதி வரி, விற்பனை வரி போன்ற பல்வேறு வகை வரிகளின் விகிதங்களும் அதிகம் எனக் கருதப்படுகின்றது.

**8. வேளாண்மையும் தொழிலும் :** வேளாண்மையும் தொழிலும் இங்கு ஒரு சேர இணைந்துள்ளது. தேயிலை பயிரிடப்படுவது வேளாண்மையாகவும், அதைப் பதப்படுத்தி விற்பது தொழிலாகவும் அமைந்துள்ளது. நில உச்சவரம்புச் சட்டம், நிலவரி, வருமானவரி, தொழிலாளர் நலச் சட்டங்கள் போன்ற வேளாண்மை யிலும் தொழிலிலும் உள்ள சிக்கல்களை இத்தொழில் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

**9. பயிரிடல் :** சரியான காலநிலை, ஈரப்பதம், மழை ஆகியவை தேவை. இவ்வியற்கையில் ஏதேனும் அதிகரித்தாலோ அல்லது குறைந்தாலோ மகசூல் பாதிக்கப்படும். மேலும் இது ஒரு நீண்டகாலப் பயிராகையால் திடீரென உற்பத்தியை அதிகப்படுத்திவிட முடியாது.

## உ. சணல் ஆலைத் தொழில் (Jute Industry)

**முக்கியத்துவம் :** இந்தியாவின் கிழக்கு மாநிலங்களில் முக்கியமான பணப்பயிர் சணலாகும். சணல் ஆலைகளில் சுமார் 3 இலட்சம் தொழிலாளிகள் வேலை செய்வதுடன், சணல் பயிர் செய்வதில் சுமார் 40 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. உலகில் சணல் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடம் வகிக்கின்றது. வங்காள தேசம் முதலிடம். இந்தியாவின் ஏற்மதியில் சணல் பொருள்களும் முக்கியமானதாகும்.

1996-97ல் ரூ.552 கோடி, 2001-2002ல் ரூ. 612 கோடி மதிப்புடைய சணல் பொருள்கள் ஏற்றுமதியாயின.

### சணல் ஆலைகள்

கொல்கத்தாவைச் சுற்றி பெரும்பாலான ஆலைகள் அமைந்துள்ளன. 1885 ஆம் ஆண்டிற்கு முன்பு இந்தியாவில் சணல் உற்பத்தி குடிசைத் தொழிலாக இருந்தது. 1885ஆம் ஆண்டில் முதலாவது நவீன ஆலை தோன்றியதிலிருந்து செழித்தோங்கி வளர்ந்தது. கொல்கத்தா துறைமுகத்தாலும் மூலப் பொருளான சணல் மேற்கு வங்காளத்தில் விளைவதாலும் இத்தொழில் அப்பகுதியில் நன்கு வளர்கின்றது.

1971ஆம் ஆண்டில் இந்திய சணல் கழகம் (Jute Corporation of India) தோற்றுவிக்கப்பட்டது. இது சணலுக்குக் குறைந்தபட்ச விலையை நிர்ணயிப்பதிலும், சணல் பயிர் கொள்முதல், சணல் பொருட்களின் உற்பத்தி, ஏற்றுமதி ஆகியவைகளையும் கவனித்துக் கொள்கின்றது.

### வேளாண்மையில் சணல் பயிர் உற்பத்தி

வேளாண்மையில் நாரப் பொருளான சணல் பயிரிடப்படுகின்றது. 1970-71 ஆம் ஆண்டில் 61.9 இலட்சம் கட்டுகளாக (கட்டொன்றுக்கு 180 கிலோ கிராம் வீதம்) இருந்த சணல் (raw jute & mesta) உற்பத்தி 1975-76ல் 59.1; 80-81ல்

Scanned with CamScanner

81.5; 85–86ல் 126.5 இலட்சம் கட்டுகள் என்று உற்பத்தியாயிற்று. இதுவே 89–90ல் 82.9 ல.க, 91–92ல் 102.9 ல.க., 96–97 111 ல.க 2001–02ல் 117 ல.க., 02–03ல் 113 ல.க. 03–04ல் 112 ல.க., 04–05ல் 103 ல.க., 05–06ல் 108 ல.க., 06–07ல் 113 ல.க., 08–09ல் 108.5 ல.க., 09–10ல் 98.2 ல.க. என்றும் உற்பத்தியாயின.

சணல் தொழிலின் விரைவான வளர்ச்சிக்காக 2005 ஆம் ஆண்டில் தேசிய சணல் கொள்கை அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றது.

### ஆலை சணல் பொருள் உற்பத்தி

நிலத்தில் விளைந்த சணல் பயிரை சணல் ஆலைகள் வாங்கி, அதனைப் பதப்படுத்தி, அதன் நாரிலிருந்து சணல் நூல், சாக்கு போன்றவைகளை உற்பத்தி செய்கின்றன. பல கலைநயம் மிக்க பொருள்களும் உற்பத்தி செய்யப் படுகின்றது. சணல் விளைச்சலில் சுமார் 82 விழுக்காட்டை இந்திய சணல் ஆலைகள் வாங்கிக் கொள்கின்றன. ஆலைகளில் சணல் பொருள்களின் உற்பத்தி 1950–51 ஆம் ஆண்டில் 8.9 லட்சம் டன்.,[1] 60–61ல் 10 ல.டன், 70–71ல் 10.6 ல.டன், 81–82ல் 13.3 ல.டன், என்று அதிகரித்து. இது மேலும் 84–85ல் 13.7 ல.டன், 89–90ல் 13.04 ல.ட, 91–92ல் 13.8 ல.ட., 96–97ல் 14 ல.ட., 2001–02ல் 13.05 ல.ட., 02–03ல் 16.22 ல.ட, 03–04ல் 15.71 ல.ட, 04–05ல் 16.13 ல.ட, 05–06ல் 15.82 ல.டன்., 06–07ல் 13.56 ல.ட., 07–08ல் 17.76 ல.ட., 08–09ல் 16.34 ல.ட., 09–10ல் 13.23 ல.ட., என்றும் அமைந்தது.[2]

### உலக அரங்கில் இந்திய சணல்

உலக சணல் ஏற்றுமதியில் வங்காள தேசம், இந்தியா, தாய்லாந்து, சீனா மற்றும் நேபாளம் என்று சணல் பொருள்களை ஏற்றுமதி செய்கின்றன. பல நாடுகள் நமது சணல் பொருட்களை நம்பியுள்ளன. இந்தியாவில் மொத்த ஏற்றுமதியில் சணலின் பங்கும் கணிசமாக உள்ளது. இந்தியாவில் சணல் பொருள்களின் ஏற்றுமதி மதிப்பு 1966–67ல் ₹ 250.8 கோடி, 73–74ல் ₹ 227 கோடி, 77–78ல் ₹ 243.2 கோடி, 80–81ல் ₹ 331 கோடி, 84–85ல் ₹ 340 கோடி, 89–90ல் ₹ 296 கோடி, 90–91ல் ₹ 298 கோடி, 91–92ல் ₹ 391 கோடி, 96–97ல் ₹ 552 கோடி, 2001–02ல் ₹ 567.52 கோடி, 02–03ல் ₹ 916.67 கோடி (அடைப்பிற்குள் இறக்குமதியான சணல் பொருள்கள் ₹ 19.26 கோடி), 06–07ல் ₹ 1,055.16 (321.94) கோடி, 07–08ல் ₹ 1,143.67 (334.81) கோடி, 08–09ல் ₹ 1,216.16 (291.99) கோடி, 09–10ல் ₹ 844.70 (650.62) கோடி என்றும் ஏற்றுமதி உயர்ந்தது.[3]

பன்னாட்டு சணல் அமைப்புக்குப் (IJO) பதிலாக 25.04.2002ல் பன்னாட்டு சணல் ஆய்வுக் குழு (IJSG) (International Jute Study Group) நிறுவப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. முன்பு இந்தியாவும் வங்காள தேசமும் போட்டியிட்டுக் கொண்டு குறைந்த விலையில் ஏற்றுமதி செய்தன. ஆனால், 1982 ஆம் ஆண்டில் இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா, சோவியத் ரஷ்யா உள்ளிட்ட சணல் ஏற்றுமதி மற்றும்

The Economic Times, 27.12.1984

GOI, Ministry of Textiles, *Annual Report*, 2010 - 11, P. 83

GOI, Ministry of Textiles, *Annual Report*, 2010 - 11, P. 86.





இறக்குமதி செய்யும் 35 நாடுகள் ஒன்று கூடி பன்னாட்டு சணல் அமைப்பை (IJO - International Jute Organisation)ஏற்படுத்தின. அதன் பின் நியாயம் கிட்டியுள்ளது. விலையைக் குறைத்து ஏற்றுமதியாவதில்லை.

மொத்த சணல் பொருட்களின் உற்பத்தியில் ஏற்றுமதியானதின் பங்கு 1961-62ஆம் ஆண்டில் 71.7% ஆக இருந்தது. 1983-84ல் 24.1% ஆகக் குறைந்து விட்டது. பல்வேறு நாடுகளும் நவீன ஆலைகளில் சணல் உற்பத்தி செய்யத் தொடங்கியதும் சணலுக்கு மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்து வதாலும் இவ்வாறு குறைந்துவிட்டது.

### சிக்கல்கள்

1. சணல் பயிர் உற்பத்தியின் அளவு ஆண்டுக்காண்டு மிகுந்த ஏற்றத் தாழ்வுடையதாக உள்ளது. உற்பத்தி குறைவாயிருக்கும்பொழுது அதிக விலையில் சணலை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

2. சணல் பயிர் தரமானதாக இல்லை.

3. பெரும்பாலான ஆலைகளின் இயந்திரங்கள் மிகவும் பழமையானவை. இதனால் சணல் பொருட்களின் தரம் குறைவதுடன், உற்பத்திச் செலவும் அதிகமாகின்றது.

4. சணல் பொருள்களின் உற்பத்தியளவில் அதிக முன்னேற்றமில்லை. எடுத்துக்காட்டாக 1950-51ல் 8.9 இலட்சம் டன் உற்பத்தியானது 1999-2000ல் 15.9 இலட்சம் டன்னாகத்தான் அதிகரித்துள்ளது. அவ்வப்போது உற்பத்தியளவு ஏறி இறக்குகின்றது. அதிகபட்சமாக 97-98ல் 16.8 இலட்சம் டன் உற்பத்தியாயிற்று.

5. போதிய அளவு எரிபொருள் கிடைப்பதில்லை.

6. பல்வேறு காரணங்களாலும் உற்பத்திச் செலவு அதிகம்.

7. தொழிலாளர் சிக்கல்களுக்கும் குறைவில்லை.

8. உற்பத்தி வரி, ஏற்றுமதி வரி போன்ற வரிகளின் சுமையும் அதிகம் எனக் கூறப்படுகின்றது.

9. சணலுக்கு மாற்றுப் பொருளாக பிளாஸ்டிக், காகிதம், துணி, மரம், தகரம் போன்ற பொருள்களின் போட்டியினால் விலைக் குறைவாகத் தான் கிடைக்கின்றது.

10. வங்காள தேசம், தாய்லாந்து, சீனா, நேபாளம் போன்ற நாடுகளின் சணல் பொருள்களின் போட்டியையும் இந்தியா சமாளிக்க வேண்டியுள்ளது.

**சமீபத்திய விவரம் :** வேளாண்மையில் சணல் பயிர்களின் உற்பத்தி 2007–08 முதல் வரிசையாக 112 + 104.7 + 102.43 இலட்சம் கட்டுகள் என்றிருந்தது[1]. ஆலைகளில் சணல் பொருள்களின் உற்பத்தி 1999–00 முதல் வரிசையாக 15.9 + 16.2 + 16 + 16.2 + 15.7 + 04–05ல் 16.3 இலசட்சம் டன் என்றும் உயர்ந்தது.

சணல் பொருள்களின் ஏற்றுமதி 99–00 முதல் வரிசையாக ரூ.571.5 கோடி + 931.7 + 567.5 + 916.7 + 1,052 + 1,147 + 1,311.63 + 1,178.39 + 1,319.36 + 2008–09ல் ரூ.1,375.80 கோடி என்றும் உயர்ந்துள்ளது[1].

1. GOI, Ministry of Textiles, *Annual Report, 2009-10*, P.46 & 48.